**தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்**

MCOP.No.131/2023

R 1/ RW : 1

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 12 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A., M.L., Ph.D., தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகையன் | த / பெ. | : | திரு. ராமையன் |
| கிராமம் | : | நாலுவேதபதி | தாலுக்கா | : | வேதாரண்யம் |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 55 |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி 1 ஆக சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பில் எழுத்துமூல நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெப்பம் என்னுடையது. அதன் விவரங்கள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டது. அவை உண்மையானவை. எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) 11.07.2024 ஆம் தேதிய **எனது தரப்பில் வேதாரண்யம் கிளை பஜாஜ் இருசக்கர வாகன விற்பனை நிலையத்திற்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அதன் நகல் அஞ்சல் இரசீதுடன் அலுவலக நகல் எ.ம.சா.ஆ 1.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) **மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் எ.ம.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 03.11.2017 ஆம் தேதிய **Bajaj Auto நிறுவனம் வேதாரண்யத்தில் என்னுடைய பழைய இருசக்கர வானத்தினை எக்ஞ்சேஞ் மூலம் கொடுத்தற்கான இரசீது அசல் எ.ம.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 03.11.2017 ஆம் தேதிய **என்னுடைய புதிய வாகனத்திற்கு முன் தொகை செலுத்திய இரசீது அசல் எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 03.11.2017 ஆம் தேதிய **என்னுடைய புதிய வாகனத்திற்கு Accessories தொகை செலுத்திய இரசீது அசல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) **என்னுடைய புதிய வாகனத்திற்கான RC BOOK நகல் எ.ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**என் சாட்சியத்தை ஏற்று இம்மனுவை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்து சமயத்தில் வாகனத்திற்கு உரிமையாளர் பெயர் என்னுடைய பெயர் உள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய வாகனத்தை ஒப்படைத்தேன் என்பதற்கோ அதனை அவர்கள் பெற்றுக்கொண்டதற்கோ சரியான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் உரிமையாளர் என்பதால் இழப்பீடு கொடுக்க கடமை உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்பு எ.ம.சா.ஆ.1 வழக்கிற்கு பின்னிட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாகனத்தின் உரிமையாளர் பெயர் என் பெயரில் உள்ளதால் இழப்பீடு கொடுக்க கடமை உள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.12 18:00:07 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்